# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 05 /2018**

திரு. வீ. பிரபு,
த/பெ எம். வீராசாமி,
எண்.133, ராமசாமி கார்டன்,
அடையார்,
சென்னை–20. . . . . . மேல்முறையீட்டாளர்
(திரு. ஏ. பழனிச்சாமி)

எதிர்

செயற் பொறியாளர்/O&M/அடையார்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–2,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. டைடல் துணை மின் நிலைய வளாகம்,
தரமணி, சென்னை–600 113. . . . எதிர்மனுதாரர்
(திரு. ரங்கநாதன், உதவி செயற்பொறியாளர்/அடையார்)

**கேட்புரை நாள் : 8–5–2018**

**ஆணை நாள் : 29.06.2018**

திரு. V. பிரபு, த/பெ எம். வீராசாமி, எண்.133, ராமசாமி கார்டன், அடையார், சென்னை–20. அவர்களின் 2.2.2018 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.5/2018 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 8.5.2018 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளர் தான் வசிக்கும் வீட்டின் ஒரு பகுதிக்கு மின் இணைப்பு கோரி மேல்முறையீடு செய்துள்ளார்.

### 2. வழக்கின் சுருக்கம் :

2.1 மேல்முறையீட்டாளர் சென்னை, அடையாறு ராமசாமி கார்டனில் கதவு எண்.133ல் உள்ள வீட்டின் ஒரு பகுதியில் வசித்து வருவதாகவும், அவரது அண்ணன் முருகன் மற்றொரு பகுதியில் வசித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். அந்த வீட்டின் மின்இணைப்பு எண்.201–023–181ஐ அனைவரும் பயன்படுத்தி வருவதாகவும் குடும்ப பிரச்சனை காரணமாக தான் வசிக்கும் பகுதியில் உள்ள மின்இணைப்பினை துண்டித்து விட்டதாகவும், ஆகவே தனக்கு தன் தந்தை பெயரில் உள்ள மின்இணைப்பையோ அல்லது தனி மின்இணைப்போ வழங்க வேண்டி மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தை நாடியுள்ளார்.

2.2 மன்றம் தன்னுடைய தீர்வை 06.10.2017 நாளிட்ட ஆணையில் வழங்கியுள்ளது. மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் மின்குறைத்தீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்துள்ளார்.

### 3. மன்றத்தின் தீர்வு

3.1 சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு–2ன் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 6.10.2017 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. மன்றம் வழங்கிய ஆணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"Order of the Forum*

*This case doesn't come under the purview of TANGEDCO, the petitioner is suggested to apply for new service connection for the portion under his occupancy with the relevant documents.*

*With this order the case is disposed off."*

4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>:

4.1 மேல்முறையீட்டாளர் தான் வசிக்கும் குடியிருப்பு பகுதியில் கடந்த 46 வருடங்களாக வசித்து வருவதாகவும், அந்த வீட்டின் மற்றொரு பகுதியில் அவரது சகோதரர் வசித்து வருவதாகவும் அந்த வீட்டின் மின்இணைப்பு எண்.201–023–181ஐ அனைவரும் பயன்படுத்தி வருவதாகவும் சரிவர மின் கட்டணம் செலுத்தாததால் கடந்த நவம்பர் 2016 அன்று மின்இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால், தான் குடியிருக்கும் பகுதியில் உபயோகிக்கும் மின்சாரத்திற்கு உண்டான கட்டணத்தை தான் share செய்து செலுத்திவருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், அவர்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக தான் குடியிருக்கும் பகுதியில் உள்ள மின்இணைப்பினை தனது சகோதாரர் மற்றும் தனது தாயார் ஆகியோர் சேர்ந்து கொண்டு துண்டித்து விட்டதாகவும் இது குறித்து தான் உதவி பொறியாளர் அலுவலகம் சென்று விசாரித்ததில் மேற்சொன்ன மின்இணைப்பின் மின்கட்டண பாக்கி ரூ.25000/– செலுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டதாகவும், அந்த தொகையை செலுத்தி மின்இணைப்பினை பெற்றுக் கொள்ள தான் சம்மதித்ததாகவும், ஆனால், அவரது சகோதரர் இதற்கு சம்மதிக்கவில்லையென்பதால் தாங்கள் மின்சாரம் இல்லாமல் இருந்து வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

4.2 இதனிடையில் பள்ளி விடுமுறை என தன் குழந்தைகளுடன் மாமனாரின் வீட்டிற்கு சென்றிருந்த சமயத்தில் தன் வீட்டின் மின் இணைப்பை துண்டித்து விட்டு ரூ.5126/– செலுத்தி சட்டவிரோதமாக மின் ஊழியர்கள் உதவியுடன் அவரது சகோதரர் மின் இணைப்பை பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மீண்டும் மின்சார அலுவலகம் சென்று விசாரித்ததில் மின் கட்டணம் ரூ.20000/– நிலுவையில் உள்ளதாகவும் தனது அண்ணன் செய்தது தவறு என்று மின்இணைப்பை துண்டித்து விட்டதாகவும், அதற்கு மறுநாள் என்னிடம் ரூ.10000/– பெற்றுக் கொண்டு மின்இணைப்பை பெற்ற அவரது அண்ணன் தற்போது அவ்வீட்டில் தான் வசிக்கும் பகுதிக்கு மின்இணைப்பு வழங்க மறுக்கிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

4.2 மின்இணைப்பு இல்லாததால் தன்னுடைய பிள்ளைகளின் படிப்பு மற்றும் உடல்நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மின் இணைப்பு தந்தையின் பெயரில் உள்ளதால் மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்க வழி செய்ய வேண்டும் என்றும் அல்லது புதிய மின் இணைப்பை அவருக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

**5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u> :**

5.1 I state that LTSC No.201-023-181 is available in the name of M. Veerasamy (petitioner's father). Petitioner Thiru. V. Prabhu had filed petition in CGRF requesting for restoration of supply. On field enquiry it is ascertained that there was an internal family dispute going on between the complainant and his own brother who in turn has disconnected the supply extended to the portion of the complainant through the above service connection which is still under live and consuming energy. The same was informed to the petitioner on 4.10.2017 in CGRF. The petitioner not convinced with the reply and filed appeal petition requesting for electricity service with family ration card, aadhar card.

5.2 I further state that it has been informed to the petitioner that request of service will be given on submission of application along with relevant documents - proof of ownership (sale deed or property/water/sewage tax).

5.3 Further, I state that as per regulation 27(3) TN Electricity Distribution Code requisition of low tension energy will be provided with the proof of documents ownership (sale deed or property / water / sewerage tax) along with application will only be considered for effecting service.

**6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>**

**6.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக **8.5.2018** அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

**6.2** மேல்முறையீட்டாளர் திரு. V. பிரபு அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

**6.3** எதிர்மனுதாரர் சார்பில் திரு. ரங்கநாதன், உதவி செயற் பொறியாளர் / O&M / அடையார் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

## 7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளர் திரு. V. பிரபு அவர்கள் கேட்புரையில் கலந்துகொண்டு அவரது மேல்முறையீட்டு மனுவில் உள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளர் தன் தந்தையாரின் பெயரிலுள்ள மின்இணைப்பு எண்.201–023–181ஐ தான், தன்னுடைய சகோதரன் மற்றும் தாயார் உட்பட அனைவரும் பயன்படுத்தி வந்ததாகவும் மேலும் அதற்குண்டான மின்சாரக் கட்டணத்தை தான் தன்னுடைய சகோதரனுடன் share செய்து செலுத்திவந்ததாகவும் தெரிவித்துள்ளார். அவ்வாறு உள்ள நிலையில் தன்னிடம் மின்கட்டணத்திற்கு பெற்ற பணத்தை அவரது சகோதரர் செலுத்தாததால் கடந்த நவம்பர் 2016 அன்று மின்இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

7.3 இது குறித்து மேல்முறையீட்டாளர் உதவி பொறியாளர் அலுவலகம் சென்று விசாரித்ததில் மேற்சொன்ன மின்இணைப்பின் மின்கட்டண பாக்கி ரூ.25000/– செலுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டதாகவும், அந்த தொகையை செலுத்தி மின்இணைப்பினை பெற்றுக் கொள்ள தான் சம்மதித்ததாகவும், ஆனால், அவரது சகோதரர் இதற்கு சம்மதிக்கவில்லையென்பதால் தாங்கள் மின்சாரம் இல்லாமல் இருந்து வந்ததாகவும் தெரிவித்தார்.

7.4 இதனிடையில் பள்ளி விடுமுறையில் மாமனாரின் வீட்டிற்கு சென்றிருந்த சமயத்தில் தான் குடியிருந்த வீட்டின் மின் இணைப்பை துண்டித்து விட்டு ரூ.5126/– செலுத்தி சட்டவிரோதமாக மின் ஊழியர்கள் உதவியுடன் அவரது சகோதரர் மின் இணைப்பை பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார். அதனால் மீண்டும் மின்சார அலுவலகம் சென்று விசாரித்ததில் மின் கட்டணம் ரூ.20000/– நிலுவையில் உள்ள நிலையில் அவரது அண்ணன் செய்தது தவறு என்று மின்இணைப்பை துண்டித்து விட்டதாகவும், அதற்கு மறுநாள் மேல்முறையீட்டாளரிடம் ரூ.10000/– பெற்று கொண்டு மின்இணைப்பை பெற்ற அவரது அண்ணன் தற்போது அவ்வீட்டில் மேல்முறையீட்டாளர் வசிக்கும் பகுதிக்கு செல்லும் மின்இணைப்பை துண்டித்ததுடன் மின்இணைப்பு வழங்கவும் மறுக்கிறார் என்றும் தெரிவித்தார்.

7.5 மின்இணைப்பு இல்லாததால் தன்னுடைய பிள்ளைகளின் படிப்பு மற்றும் உடல்நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மின் இணைப்பு தந்தையின் பெயரில் உள்ளதால் மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்க வழி செய்ய வேண்டும் என்றும் அல்லது புதிய மின் இணைப்பை அவருக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

8. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர் சார்பில் ரங்கநாதன், உதவி செயற்பொறியாளர்/O&M/அடையார் அவர்கள் தனது பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 மின்இணைப்பு எண்.201–023–181 ஆனது மேல்முறையீட்டாளரின் தந்தையான திரு எம்.வீராசாமி என்ற பெயரில் இருப்பதாகவும், மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின்இணைப்பு துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளது என்று மன்றத்தில் புகார் செய்ததின் அடிப்படையில் செய்யப்பட்ட கள ஆய்வின்போது மின்இணைப்பு எண்.201–023–181 ஆனது Live –ஆக இணைப்பு நிலையில் இருந்ததாகவும், தொடர்ந்து மின்பயன்பாடும் இருந்ததை மேல்முறையீட்டாளரிடம் தெளிவாக எடுத்துரைத்தாகவும் தெரிவித்தார். மேல்முறையீட்டாளருக்கும் அவரது சகோதரருக்கும் உள்ள பிரச்சினை காரணமாக மேல்முறையீட்டாளர் குடியிருக்கும் பகுதிக்குரிய மின்இணைப்பை மட்டும் அவரது சகோதரர் மின்துண்டிப்பு செய்துள்ளதையும் அறியமுடிந்ததாக தெரிவித்தார்.

8.3 மின்இணைப்பு எண்.201–023–181 ஐ கூட்டாக பயன்படுத்துவது மேல்முறையீட்டாளரின் குடும்ப பிரச்சினை என்பதால், அதை அவர்களுக்குள் சரிசெய்துகொள்ளுமாறு அறிவுறுத்தியதாகவும் தெரிவித்தார்.

8.4 மேலும் மேல்முறையீட்டாளர் தனக்கு தனி மின்இணைப்பு வேண்டும் என்று கோருவதால் தமிழ்நாடு மின்சார பகிர்மான விதி 27(3)ன்படி மின்இணைப்பு கோரும் விண்ணபத்துடன் உரிய சான்றாவனங்களையும் சமர்பிக்கும்பட்சத்தில் மேல்முறையீட்டாளருக்கு தனி மின்னிணைப்பு வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் மின்னிணைப்பு கோரும் இடமானது திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயிலுக்கு சொந்தமானது என்று தெரிவித்தார்.

8.5 மேலும் திருக்கோவில் இணை ஆணையர் அவர்கள் திருக்கோயிலுக்கு சொந்தமான அடையார் (ஊரூர் கிராமப்பகுதியில் உள்ள பிளாக் எண்கள் 3, 4, 5, 6 மற்றும் 8 ஆகியவற்றில் புதியதாக ஒரு முனை, மும்முனை இணைப்பு மற்றும் கூடுதல் மின்னிணைப்பு வேண்டி யாரேனும் விண்ணபித்தால், இந்துசமய அறநிலையத்துறை ஆணையரின் அனுமதி பெற்று அதனடிப்படையில் இணை ஆணையர்/செயல் அலுவலர் அவர்கள் அனுமதி வழங்கமுடியும் என்றும், ஆகவே திருக்கோயில் அலுவலக அனுமதியின்றி மின்னிணைப்பு வழங்க வேண்டாம் என்று 24.01.2018 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதால், கோவில் நிர்வாக

அலுவலரிடமிருந்து தடையின்மை சான்று பெற்று சமர்ப்பித்தால் மட்டுமே விண்ணப்பம் பரிசீலிக்க முடியும் என்றும் தெரிவித்தார். மேலும் இதுசம்பந்தமாக மேல்முறையீட்டாளருக்கு உதவி மின் பொறியாளர் அலுவலகத்தின் மூலம் 09.04.2018 மற்றும் 21.04.2018 ஆகிய கடிதங்களின் வாயிலாக உரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து அக்கடிதங்களின் நகலையும் சமர்பித்தார்.

**9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>**

மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர்களின் வாதங்களை கருத்தில் கொண்டால், கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) ஒரு புதிய தாழ்வழுத்த மின்இணைப்பை வீட்டிற்கு வழங்க வேண்டும் என்றால் விதிகளில் கூறப்பட்டுள்ளது என்ன ?

(ii) மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளின்படி அவருக்கு புதிய மின்இணைப்பு வழங்கவேண்டும் என்பது ஏற்புடையதா ?

**<u>10. வழக்கெழு 1–ற்கான தீர்வு–</u>**

**10.1** ஒரு புதிய தாழ்வழுத்த மின் இணைப்பை பெறுவது சம்பந்தமான விதிகள் பற்றி அறிந்துகொள்ள தற்பொழுது அமலில் தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(3)ஐ ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ 27. Requisitions for Supply of Energy:*

*(1) xxx xxx xx*

*(2) xxx xxx xx*

*(3) The application for HT service connection shall be in FORM-4. Application for LT service connection (other than Agriculture and Hut), LT Agriculture service connection and LT Hut service connection shall be in FORM - 1,2 and 3 respectively.*

*Note : Requisitions for supply of energy ( Applications) , even if incomplete, and irrespective of whether they are handed over in person or by post, should be acknowledged in writing. If they are in order, they shall be registered immediately and acknowledged. If they are incomplete, the defects should be indicated and returned without registration.*

10.2 மேற்கண்ட விதி 27(3) ன் படி தாழ்வழுத்த மின்சாரம் விவசாயம் தவிர்த்த விண்ணப்பங்கள் படிவம்–1ன் படியும் குடிசைக்கான மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் படிவம்–3ன் படியும் இருக்க வேண்டும். இங்கு வழங்கப்பட்ட மின்இணைப்பு தாழ்வழுத்த வீட்டிற்கான மின்இணைப்பு என்பதால் அதற்கான விண்ணப்ப படிவம்–1 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*" FORM-1*

***Application Form for L.T. Service connection (except Agriculture and Hut)***

***FORM OF REQUISITION FOR SUPPLY OF LOW TENSION ENERGY ( SINGLE PHASE / THREE PHASE***

*xxx xxx xx*

*Note : The application shall be accompanied with the following documents:*

*(i)* *Certified copy of proof of ownership such as sale deed/ partition deed/gift settlement /allotment letter/computer patta / ownership certificate issued by revenue department officials /court judgment or recent property tax receipt.*

*(ii)* *In the case of joint property, certified copies of proof of ownership such as legal heir certificate along with parent documents specified in note(i) above and consent letters from co-owners. If consent letter is not produced, an indemnity bond with enhanced security deposit.*

*(iii)* *If the applicant is not the owner, consent letter from owner in FORM No.5 or valid proof of occupancy, and indemnity bond in FORM No.6.*

10.3 மேற்கண்ட படிவத்தின்படி கீழ்கண்ட ஆவணங்களும் இணைத்து விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

i) உடைமைகளின் சான்றிடப்பட்ட நகல்களான விற்பனை ஒப்பாவணம்/ பிரிவினை ஒப்பாவணம்/பரிசு ஒப்பந்தம்/ஒதுக்கீடு கடிதம்/கணினி பட்டா/வருவாய்த்துறை அதிகாரிகளினால் வழங்கப்பட்ட உரிமைப் பத்திரங்கள்/நீதிமன்ற தீர்ப்பு அல்லது சொத்துவரி ரசீது.

ii) கூட்டு சொத்து உடைமைகளுக்கு உடைமைகளின் சான்றிடப்பட்ட நகல்களான சட்டப்படியான வாரிசு சான்றிதழ், அதனோடு குறிப்பு (i)ல் கூறப்பட்டிருக்கும் மூல ஆதாரங்களும் மற்றும் கூட்டுரிமையாளர்களின் இசைவு கடிதங்கள் இல்லையென்றால் ஈட்டுறுதி பிணைமுறியோடு மிகுதிப்படுத்தப்பட்ட காப்பீட்டுத்தொகை.

iii) விண்ணப்பதாரர் உடைமையாளர் இல்லையென்றால் உடைமையாளரின் இசைவுக் கடிதம் படிவம்–5ல் சமர்ப்பிக்க வேண்டும் அல்லது செல்லத்தக்க குடியிருப்பவர் சான்றும் படிவம்–6ல் உள்ள ஈட்டுறுதி பிணைமுறி சமர்ப்பிக்க வேண்டும்.

10.4 எனவே, புதிய மின்இணைப்பு கோருவோர் ஒழுங்குமுறை ஆணையத்தால் வடிவமைக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தில் மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தோடு பத்தி 10.3–ல் தெரிவிக்கப்பட்டு இருக்கும் ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**10.5** மேலும், விண்ணப்பதாரர் உரிமையாளராக இல்லாமல் குடியிருப்போர் என்ற வகையில் விண்ணப்பித்தால் அவ்வாறு ஒரு புதிய தாழ்வழுத்த மின் இணைப்பை பெறுவது சம்பந்தமான விதிகள் பற்றி அறிந்துகொள்ள தற்பொழுது அமலில் தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(4)ஐ ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*" 27. Requisitions for Supply of Energy:*

*xxx xxx xx*

*(4). An intending consumer who is not the owner of the premises shall produce a consent letter in Form 5 of Annexure III to this code from the owner of the premises for availing the supply. If the owner is not available or refuses to give consent letter, the intending consumer shall produce valid proof of his/her being in occupation of the premises and also execute an indemnity bond in Form 6 of the Annexure III to this code indemnifying the licensee against any loss on account of disputes arising out of effecting service connection to the occupant and acceptance to pay security deposit twice the normal rate.*

*Explanation:- For the purpose of this sub-regulation, the expression "valid proof" means any proof of occupancy such as registered power of attorney or latest rent receipt issued prior to the date of application or lease deed or possession order from appropriate authority or decree or judgment of Courts.*

10.6 மேற்கண்ட விதி 27(4)ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது இருப்பிடத்திற்கு சொந்தக்காரராக இல்லாத மின் இணைப்பு கோரும் விண்ணப்பதாரர் இருப்பிட உரிமையாளரின் சம்மத கடிதத்தை பெற்றுத்தரவேண்டும். அவ்வாறு சம்மதகடிதம் தர இருப்பிட உரிமையாளர் மறுத்துவிட்டால் விண்ணப்பதாரர் விண்ணப்பத்துடன் செல்லத்தக்க ஆவணங்கள் தரவேண்டும்.

10.7 செல்லத்தக்க ஆவணங்கள் என்பது பதிவு செய்யப்பட்ட அதிகார அளிப்பு ஆவணம், மின்னிணைப்பு கோரும் விண்ணப்பத்தின் தேதிக்கு முன் அளிக்கப்பட்ட சமீபத்திய வாடகை ரசீது, குத்தகை ஒப்பாவணம், உரிய அதிகார அமைப்பிடமிருந்து பெறப்பட்ட உடமை கட்டளை அல்லது நீதிமன்ற தீர்ப்புகள் அல்லது உத்தரவுகள் அது போன்ற ஏதாவதொரு குடியிருப்பு சான்று அளிக்கப்படவேண்டும் என்று அறியமுடிகிறது.

<u>**11. வழக்கெழு 2–ற்கான தீர்வு–**</u>

11.1 மேல்முறையீட்டாளரிடம் தான் உரிமையாளர் என்பதற்கான எவ்வித ஆதாரமும் இல்லையென்றும், ஆனால் தான் இந்த முகவரியில் 46 வருடங்களாக வசித்து வருவதாகவும், தன்னிடம் அடையாள ஆவணங்களாக குடும்ப அட்டை, ஆதார் அட்டை மற்றும் ஓட்டுநர் உரிமம் ஆகியவை உள்ளதாகவும் எனவே குடியிருப்போர் என்ற வகையில் தனக்கு மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

11.2 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்துடன் உரிய சான்றாவனங்களையும் சமர்பிக்கும்பட்சத்தில் மேல்முறையீட்டாளருக்கு தனி மின்னிணைப்பு வழங்கப்படும் என்றும், ஆனால் மின்னிணைப்பு கோரும் இடமானது திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயிலுக்கு சொந்தமானது என்பதால், கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலரிடமிருந்து தடையின்மை சான்று பெற்று சமர்ப்பித்தால் மட்டுமே விண்ணப்பம் பரிசீலிக்க முடியும் என்று தெரிவித்துள்ளார். மேலும் இதுசம்பந்தமாக மேல்முறையீட்டாளருக்கு உதவி மின் பொறியாளர் அலுவலகத்தின் மூலம் 09.04.2018 மற்றும் 21.04.2018 ஆகிய கடிதங்களின் வாயிலாக உரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் வாதிட்டுள்ளார்.

11.3 மேல்முறையீட்டாளரும் தான் தற்பொழுது குடியிருந்து வரும் இடம் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயிலுக்கு சொந்தமானதுதான் என்று தெரிவித்தார். மேலும் தான் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகையை திருக்கோவில் நிர்வாகத்திடம் செலுத்தி விட்ட பின்பும் திருக்கோயிலின் இணை ஆணையர்/செயல் அலுவலர் தனக்கு மின்னிணைப்பு பெற்றுக்கொள்ள தடையின்மை சான்று வழங்க மறுப்பதையும் தன்னுடைய வாதத்தில் தெரிவித்துள்ளார்.

11.4 மின்னிணைப்பு கோரியுள்ள இடம் இந்துசமய அறநிலையத்துறைக்கு சொந்தமானது என்பதால் இதுசம்பந்தமாக மின் வழங்கல் விதித் தொகுப்பின் விதி 27 (12) –ஐ ஆராய விரும்புகிறேன். மின் வழங்கல் விதித் தொகுப்பின் விதி 27 (12) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ 27. Requisitions for Supply of Energy:*

*xxx xxx xx*

*(12) Supply shall be given in Poromboke lands/Government lands on production of No Objection Certificate obtained from the concerned officer of the Government of Tamil Nadu. The applicant shall execute an indemnity bond in FORM-6 of the ANNEXURE III to this code and also pay security deposit twice the normal rate.*

11.5 மேற்கண்ட விதி 27(12)ஐ கூர்ந்து படிக்கும்பொழுது புறம்போக்கு நிலங்கள் / அரசு நிலங்களில், தமிழ்நாடு அரசின் உரிய அலுவலரிடமிருந்து பெற்று மறுப்பின்மைச் சான்றிதழை அளித்தால் மின்னிணைப்பு வழங்கப்படும். மேலும், விண்ணப்பதாரர் இவ்விதியின் பின்னிணைப்பு III –ல் உள்ள படிவம் – 6 –ன் படியான காப்புறுதி பத்திரமும், இயல்பான காப்புறுதித் தொகையை போல இரட்டிப்பு மடங்கு காப்புறுதித் தொகையை செலுத்த வேண்டும் என்று அறியமுடிகிறது.

11.6 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு கோரும் இடம் அரசின் இந்துசமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயிலுக்கு சொந்தமானது என்பதால் மேல்முறையீட்டாளர் அவரின் மின்னிணைப்பு கோரும் விண்ணபத்துடன் உரிய சான்றாவனங்களும், கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலரிடமிருந்து பெறப்பட்ட மறுப்பின்மை சான்று (No Objection Certificate) ஆகியவற்றை சமர்ப்பித்தால் மட்டுமே மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தை பரிசீலிக்க முடியும் என்ற எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது.

11.7 பத்தி 11.6 உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு கோரும் விண்ணப்பம் மற்றும் உரிய சான்றாவனங்களுடன் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலரிடமிருந்து மறுப்பின்மை சான்று (No Objection Certificate) பெற்று சமர்ப்பித்தால் மட்டுமே அவருக்கு புதிய மின்னிணைப்பு வழங்கமுடியும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12** **<u>முடிவுரை</u>**

**12.1** பத்தி **11**– ல் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளர் அவரின் மின்னிணைப்பு கோரும் விண்ணப்பம் மற்றும் உரிய சான்றாவனங்களுடன் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலரிடமிருந்து மறுப்பின்மை சான்று (No Objection Certificate) பெற்று சமர்ப்பித்தால் மட்டுமே அவருக்கு புதிய மின்னிணைப்பு வழங்கமுடியும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12.2** மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.5/2018 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. வீ. பிரபு,
த/பெ எம். வீராசாமி,
எண்.133, ராமசாமி கார்டன்,
அடையார், சென்னை–20.

2) செயற் பொறியாளர்/O&M/அடையார்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–2,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. டைடல் துணை மின் நிலைய வளாகம்,
தரமணி, சென்னை–600 113.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–2,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கேவி துணை மின் நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை–600 078.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – <u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.